**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 63/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 05.02.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜசேகர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சேலம்கேம்பில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். எதிரி என் மருமகன் ஆவார். கடந்த 3 வருடத்திற்கு முன்பாக என் மருமகன் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். பிறகு என் மகள் விவேக் என்பவருடன் காதல் திருமணம் செய்து கொண்டார். கடந்த 28.10.2024 ம் தேதி மாலை 4 மணிக்கு என் மருமகளுடன் பேசிக் கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர் இரவு நேரத்தில் என்னை தள்ளிவிட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது. இதனால் எனக்கு காயம் ஏற்பட்டது. பிறகு மருத்துவமனைக்கு சென்றேன்.

2) காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை எதிரிகளின் மீது இருந்த சந்தேகத்தின் பேரில் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது கைரேகை மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு**

**சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) கடந்த 27.10.2024 ம் தேதி மாலை 4 மணிக்கு நான் புதுசாம்பள்ளியில் உள்ள என் மகள் வீட்டிற்கு சென்று வியாபாரத்திற்கு செல்லவில்லை என்பதால் இரு சக்கர வாகனத்தை கேட்டேன் என்றால் இல்லை.கடந்த 28.10.2024ம் தேதி அதிகாலை 5 மணிக்கு நான் வீட்டிற்கு வெளியே வந்த போது எதிரி கெட்ட வார்த்தையால் பேசினாரா என்றால் இல்லை. பிறகு கட்டையால் என் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**